<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.72/2022 | Date | : 13.08.2024 |
| Deposition of Witness for | : **அ.சா.6** | Taluk | : |
| Name | : **சாந்தி** | Calling | : |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.08.2024.

<u>(எதிரிகள் ஆஜர்.எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர் .)</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை**</u>

நான் நாகிசெட்டிபட்டியில் குடியிருந்து வெப்படையில் உள்ள தனியார் நூற்பாலையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 02.01.2021 ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணியிலிருந்து 04.30 மணி அளவில் சங்ககிரி காவல் நிலையத்தில் இருந்து போலீசார் வந்து தங்கராஜ் வீட்டிற்கு முன்பு நடந்த சண்டை சம்பந்தமாக வரைபடம் வரைவதற்கு சாட்சியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். நானும் எனது மகள் கௌசிகாவும் சாட்சியாக இருப்பதாக ஒப்புக்கொண்டோம். பின்னர் போலீசார் அங்குள்ள வீடுகள் போன்றவற்றை படம் வரைந்து மகஜரில் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். நானும் எனது மகளும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசாரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடைய மகள் கௌசிகா என்பவருடையதாகும். (**பார்வை மகஜர் அ.சா.ஆ–2–ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வருட பிறப்பிற்கு முந்தைய

தினம் கார்த்திக் குடும்பத்தாருக்கும் மணியம்மா குடும்பத்தாருக்கும் இடையில் நடந்த தகராறு சம்பந்தமாக விசாரிக்க வந்ததாக போலீசார் கூறினார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1) எனக்கு எத்தனை மகள்கள் உள்ளார்கள் என்றால் மூன்று மகள்கள் உள்ளது. சாட்சி தங்கராஜ் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். நான் வேலைக்கு எப்போது செல்வேன் என்றால் சண்டை நடந்த சமயத்தில் மூன்று ஷிப்ட் வேலைக்கு செல்வேன் தற்போது மதியம் ஷிப்ட் வேலைக்கு செல்கிறேன். நான் மூன்று ஷிப்ட் வேலைக்கு சென்றதால் வீட்டில் அதிக நேரம் என்னால் இருக்க முடியாது என்றால் வேலை நேரம் தவிர மற்ற நேரம் வீட்டில் தான் இருப்பேன். புத்தாண்டுக்கு பின்பு எனக்கு விடுமுறை இல்லை என்றால் விடுமுறை எடுத்துக் கொள்வது என்னுடைய விருப்பம் எப்போது வேண்டுமானாலும் விடுமுறை எடுத்துக் கொள்ளலாம்.

2) பார்வை மகஜகரில் உள்ள சாட்சி கையொப்பங்கள் இரண்டும் ஒரே மாதிரியாக உள்ளது என்றும் எனவே நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் நான் படித்து பார்த்தேன் தற்போது ஞாபகம் இல்லை. தங்கராஜ் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து சொன்ன நேரத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-Shanthi

Sd/-S.R.Babu,
Judicial Magistrate No.I,
Sankari.